பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

08 11 2025 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 5 நாள் அரசுமுறைப் பயணமாக அங்கோலா, போட்ஸ்வானா நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வாரணாசியில் 4 புதிய வந்தே பாரத் விரைவு ரயில் சேவைகளை தொடங்கி வைக்கிறார்.
- இந்தியா சர்வதேச திரைப்பட விழா, இந்த ஆண்டு செயற்கை நுண்ணறிவு திரைப்பட விழாவாகவும் நடைபெற உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- ரஷ்ய ராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் இந்தியர்களை சேர்ப்பதை அந்நாடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்தியா கூறியுள்ளது.
- 2029ஆம் ஆண்டு நடைபெற உள்ள மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 10ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 5 நாள் அரசுமுறைப் பயணமாக அங்கோலா, போட்ஸ்வானா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த பயணத்தின் முதற்கட்டமாக அங்கோலா செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. Joao Manuel Goncalvs-ஐ சந்தித்து நாளை இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்துகிறார்.

வரும் 11ஆம் தேதி அங்கோலாவின் 50வது சுதந்திர தின கொண்டாட்டங்களிலும் அவர் பங்கேற்கிறார்.

அங்கோலா நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ள குடியரசுத்தலைவர், அங்கு வசிக்கும் இந்திய சமூகத்தினருடனும் கலந்துரையாட திட்டமிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும்-அங்கோலாவுக்கும் இடையே தூதரக உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

தனது பயணத்தின் இரண்டாம் கட்டமாக வரும் 11ஆம் தேதி போட்ஸ்வானா செல்ல உள்ள திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு. Duma Gideon Bokoon-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

போட்ஸ்வானாடா நாடாளுமன்றத்திலும் உரையாற்ற உள்ள குடியரசுத்தலைவர், அந்நாட்டில் உள்ள கலாச்சாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிட உள்ளார்.

குடியரசுத்தலைவரின் இந்தப் பயணம், இந்தியா-போட்ஸ்வானா நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வாரணாசியில் 4 புதிய வந்தே பாரத் விரைவு ரயில் சேவைகளை தொடங்கி வைக்கிறார்.

நாட்டில் நவீன ரயில் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக முக்கிய நகரங்களுக்கு இடையே விரைவு ரயில் போக்குவரத்து சேவை அதிகரிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் தொலைநோக்கு பார்வையின்கீழ் மக்களின் போக்குவரத்து தேவைகளை எளிதாக்கவும், விரைவாக்கவும், கூடுதல் வசதிகளுடன் நிறைவேற்றவும், உலகத் தரத்திலான ரயில் போக்குவரத்து சேவைகளை வழங்க இது வகை செய்கிறது.

எர்ணாகுளம் - பெங்களூ, பனாரஸ் - காஜுரஹு, லக்னோ - சஹரன்புர், ஃபெரோஸ்புர் - தில்லி ஆகிய வழித்தடங்களில் புதிய வந்தே பாரத் ரயில்களின் சேவைகளை பிரதமர் கொடியசைத்து துவக்கி வைக்கிறார்.

தென்னிந்தியாவில் எர்ணாகுளம் - பெங்களூரு இடையே இயக்கப்பட உள்ள புதிய வந்தே பாரத் விரைவு ரயில் சேவை இந்த வழித்தடத்தில் பயண நேரத்தை 2 மணி நேரமாக குறைக்கும்.

இந்த ரயில் தமிழகத்தின் கோவை-திருப்பூர்-ஈரோடு-சேலம் ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

56வது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இம்மாதம் 20ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள திரைப்படத் தயாரிப்பாளர்கள், கதை சொல்லிகள் மற்றும் தொலைநோக்குப் பார்வையாளர்களை இந்த விழா ஒருங்கிணைக்கும் என்று சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இந்தியா சர்வதேச திரைப்பட விழா, இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு திரைப்பட விழா மற்றும் ஹேக்கத்தானுடன் நடைபெற உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய திரைப்படத் துறையை மறுவரையறை செய்யும் வகையில் கலை மற்றும் புதுமைத் தொழில்நுட்பம் ஆகியவற்றின் இணைவைக் கொண்டாடும் வகையில் இந்த விழா நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்று மாசு அதிகரித்து வருவதால் அரசு அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்களின் பணி நேரத்தை மாற்றியமைக்க தில்லி அரசு முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தில்லி அரசு அலுவலகங்கள் காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரையும், மாநகராட்சி அலுவலகங்கள் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரையும் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாநகரில் போக்குவரத்து நெரிசல் குறைந்து பொதுமக்கள் எளிதாகச் செல்ல வழிவகுக்கும் என்று திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

காற்று மாசு ஏற்பட்ட பிறகு அதற்குத் தீர்வு காணாமல் பிரச்சினை வருவதற்கு முன்பே சரிசெய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கை குளிர்காலத்தில் அதிகரிக்கும் காற்றின் மாசு கணிசமாக கட்டுப்படுத்தப்படும் என்றும் தில்லி முதலமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ரஷ்ய ராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் இந்தியர்களை சேர்ப்பதை அந்நாடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்தியா கூறியுள்ளது.

தற்போது ரஷ்ய ராணுவத்தில் உள்ள 44 இந்தியர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

சமீபகாலமாக பல இந்தியர்கள் ரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து தங்களுக்கு தகவல் கிடைதுள்ளது என்றும், இந்த விஷயத்தை ரஷ்யாவின் கவனத்திற்கு இந்தியா கொண்டு சென்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற நடைமுறைக்கு ரஷ்யா விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரஷ்ய ராணுவத்தின் ஒப்பந்த அடிப்படையில் சேர்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்றும், ஏனென்றால் அத்தகைய பணி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் திரு. ஜெய்ஸ்வால் கூறினார்.

<<<<>>>>

மத்திய கல்வியமைச்சகத்தின் முன்முயற்சியில் காசி தமிழ்ச் சங்கமத்தின் நான்காவது பதிப்பு அடுத்த மாதம் 2ஆம் தேதி நடைபெற உள்ளது.

ஒரு மாத காலம் நடைபெற உள்ள கலாச்சார மற்றும் அறிவுசார் நிகழ்ச்சியை சென்னை ஐ.ஐ.டி-யும், பனாராஸ் இந்து பல்கலைக்கழகமும் இணைந்து நடத்த உள்ளன.

இதற்காக வட இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு தமிழ் கற்றுத்தரப்பட உள்ளது.

இந்த நிகழ்வில் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் திரு. காமகோட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த ஆண்டு காசி தமிழ்ச் சங்கமத்தில் தமிழகத்தில் இருந்து ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்றும், உத்தரப்பிரதேசத்தில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழகத்தின் ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு வருகைதர உள்ளதாகவும் அவர் கூறினார்.

காசி தமிழ்ச் சங்கமத்தில் பங்கேற்க kashitamil.iitm.ac.in என்ற வலைதளத்தில் பதிவு செய்யலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஒரே நாடு - ஒரே உரம் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் தரமான உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் ஒரே தரத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் தரமான உரம் கிடைப்பது இத்திட்டத்தின்கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இயற்கை உர பயன்பாட்டை ஊக்குவிக்கவும், வெளிநாடுகளில் இருந்து உர இறக்குமதியைக் குறைக்கவும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இத்திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிமுகம் செய்து வைத்தார்.

தோட்டக்கலைப் பயிர்களுக்குப் பெயர்போன நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 14 லட்சம் டன் யூரியா உரம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

2029ஆம் ஆண்டு நடைபெற உள்ள மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 10ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

துபாயில் நேற்று நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

லாஸ் ஏஞ்சல்சில் 2028ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டிருப்பதால் அப்போட்டிகள் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டிகளாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தலா 6 அணிகள் பங்கேற்கும் என்றும், மொத்தம் 28 போட்டிகள் நடைபெறும் என்றும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூறியுள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் மணி 1.45க்கு தொடங்க உள்ளது.

ஏற்கனவே நடந்த 4 போட்களில் ஒரு போட்டி டிரா ஆன நிலையில் 2 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியா ஒரு போட்டியில் வெற்றி பெற்றது.

கடைசி போட்டியிலும் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றும் முனைப்புடன் இந்திய அணி இன்றைய போட்டியை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**